விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 014 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 18 திங்கட்கிழமை (02.01.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=



## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)
நாடளாவிய ரீதியிலுள்ள சகல பாடசாலைகளிலும் இன்று (ஜன. 2) திங்கட்கிழமை முதல் 2022ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்விப் பொதுத் தராதர உயர்தர 11

## தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு வழங்குவது அரசின் கடப்பாடு

### கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்

(கொழும்பு)
தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வை வழங்குவது அரசாங்கத்தின் கடப்பாடாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தற்போது அதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் அவை வெற்றி பெற முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவோம் என்றும் கூறினார். 11



## தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்க

# சர்வகட்சி மாநாட்டின் தடைகளைக் களைக

### கலாநிதி தயான் ஜயத்திலக

(கொழும்பு)
தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வினைக் காண்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்கப்படும் சர்வகட்சி மாநாட்டின் ஊடாக வெற்றி பெறுவதாக இருந்தால், அதில் காணப்படுகின்ற தடைகளை முதலில் இனங்கண்டு களைய வேண்டுமென கலாநிதி தயான் ஜயத்திலக வலியுறுத்தியுள்ளார்.

(11ஆம் பக்கம் பார்க்க)



## புத்தாண்டில் அனர்த்தம்

### வைத்தியசாலையில் 67 பேர் அனுமதி

(கொழும்பு)
புத்தாண்டு பிறந்ததில் இருந்து ஏற்பட்ட அனர்த்தங்களால் 67 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 11

## புதிய வரி கொள்கை

### நேற்று முதல் அமுல்

(கொழும்பு)
2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட வரி திருத்தம் உள்ளிட்ட பல தீர்மானங்கள் ஞாயிறு முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய 11

## பணவீக்கம், வட்டிவீதத்தை முகாமை செய்து

## பொருளாதாரத்தை வழமைக்கு கொண்டுவர எதிர்பார்ப்பு

### மத்திய வங்கி ஆளுநர்

(கொழும்பு)
இந்த வருடத்தில் பணவீக்கத்தையும் வட்டி வீதங்களையும் முகாமை செய்து நாட்டின் பொருளாதாரத்தை வழமைக்கு கொண்டுவர எதிர்பார்த்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரி 02

## கிளிநொச்சியில் இளைஞன் குத்திப் படுகொலை

### புதுவருடம் அன்று சம்பவம்

(கிளிநொச்சி)
கிளிநொச்சியில் இளைஞன் ஒருவர் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

புதுவருட தினமான நேற்று அதிகாலை 4 மணியளவில் கிளிநொச்சி விநாயகபுரம் கிராமத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த தவக்குமார் சுரேஸ் (வயது-26) 11

## இசை நிகழ்ச்சியில் வாய்த் தர்க்கம்

### வவுனியாவில் இருவர் கைது

(வவுனியா)
வவுனியா நகர சபை மைதானத்தில் 02

## புதிய வாகனங்களை பதிவு செய்யும்போது

### புதிய நடைமுறை அறிமுகம்

(கொழும்பு)
இலங்கையில் புதிதாக வாகனங்களை பதிவு செய்யும் போதும் உரிமை மாற்றத்தில் புதிய நடைமுறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதன்போது மாகாண எழுத்துகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகம் நிஷா நதரசிங்க தெரிவித்

## கல்லுண்டாயில் வாள்வெட்டுத் தாக்குதல்

### ஒருவர் படுகாயம்

(மானிப்பாய்)
மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லுண்டாய் வைரவர் ஆலயத்திற்கு அருகாமையில் நேற்றிரவு இடம்பெற்ற வாள்வெட்டில் 34 வயதுடைய நபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வாள்வெட்டிற்கு இலக்கானவரது வீ 02

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பழைய கேற் தேவை

நல்ல நிலையிலுள்ள பழைய கேற் வாங்கப்படும். அளவு 11 அடி அல்லது 11 1/2 அடி.

077 315 1326


## கல்லுண்டாயில்...

னது வாள்வெட்டு நடந்த இடத்திற்கு அருகாமையிலேயே காணப்படுகிறது. இந்நிலையில் அவர் வீட்டுக்கு வெளியே வந்து வீதியில் நின்றவேளை முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த கும்பல் வாள்வெட்டினை மேற்கொண்டுவிட்டு அங்கிருந்து தப்பித்துச் சென்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

வவுனியா பொலிஸார் அடிதடியில் ஈடுபட்ட இருவரை கைது செய்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7.250)

## இசை நிகழ்ச்சி...

இடம்பெற்ற இசை நிகழ்ச்சியின் போது அடிதடியில் ஈடுபட்டதாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புதுவருட தினத்தை முன்னிட்டு வவுனியா நகரசபை மைதானத்தில் இசை நிகழ்வு ஒன்று முன்தினம் இரவு நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட இளைஞர் குழுக்களுக்குள் வாய்தர்க்கம் ஏற்பட்டு அடிதடியாக மாறியது.

இதனையடுத்து விரைந்து செயற்பட்ட

## பொருளாதார...

வித்துள்ளார்.

கண்டியில் மகாநாயக்க தேரர்களை சந்தித்ததன் பின்னர், ஊடகங்களிடம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பொருளாதார சுமைகள், இந்த வருடம் ஓரளவு தணிக்கப்படும் என மத்திய வங்கியின் ஆளுநர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ம-7)

# மரண அறிவித்தல்

## திருமதி துஸ்ஸாரா கண்ணதாசன்



மலர்வு 12.02.1987 உதிர்வு 31.12.2022

டச்சு வீதி, வீமன்காமம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கப்பம்புலம் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துஸ்ஸாரா கண்ணதாசன் அவர்கள் கடந்த 31.12.2022 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சந்திரகாந்தியம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் கண்ணதாசனின் (சுவிஸ்) அருமை மனைவியும் ரனுஜாவின் (யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை) பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.01.2023) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கப்பம்புலம், சுன்னாகம்.
077 723 8478, 077 886 0049 (14101)

தகவல்: குடும்பத்தினர்

# துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் தமிழ்ப் பாட ஆசிரியை திருமதி. லோகேஸ்வரி சந்திரலிங்கம் அவர்களது அன்புத் தாயார்

## திருமதி கற்பாத்தை சின்னத்தம்பி

அவர்கள் இறைபதமடைந்த செய்தி அறிந்து துயரடைகின்றோம். அவரது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

(C-5722)

பாடசாலைச் சமூகம்
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 24 . 09 . 1980

ஆண்டவன் மடியில் 02 . 01 . 2016

(C-5718)

அமரர்

## தீபா கெங்கேஸ்வரன்


எங்கள் அன்புச் செல்வ மகள்
கெ.தீபா எங்களை விட்டுப் பிரிந்து
இன்றுடன் ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டன.

" எங்கள் உயிர் உள்ளவரை என்றும் உன் நினைவுடன் வாழும்"

தண்ணீரூற்று, முள்ளியவளை.

உனது அன்பு அப்பா, அம்மா, கணவன், ஆசை மகள் சாலு மற்றும் சகோதரங்கள்

# மரண அறிவித்தல்



ஜனனம் 1945 . 06 . 20

மரணம் 2023 . 01 . 01

## தினகரி பூபாலசிங்கம் (குஞ்சையா)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட தினகரி பூபாலசிங்கம் அவர்கள் நேற்று (01.01.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தினகரி - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் - வடிவாம்பிகை தம்பதிகளின் மருமகனும் முருகுப்பிள்ளை, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும் லக்சி (ஆசிரியை - வ/சைவப்பிரகாச ஆரம்ப பாடசாலை), கலைவாணி (லண்டன்), நிரோஜா (ஆசிரியை - யா/கலட்டி றோ.க.த.க பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயகுமாரன், கிருஸ்ணதாஸ் ஆகியோரின் மாமனாரும் ஜருஜன், கிருஷிகா, அக்ஷயா, யஷ்மிகா, ஷன்சிகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2023) திங்கட்கிழமை பி.ப 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-5720)

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன்துறை-இந்திய கப்பல் சேவை மார்ச்சில் ஆரம்பம்-அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

இந்தியாவுக்கும் காங்கேசன் துறைக்கும் இடையில் பயணிகள் போக்குவரத்து கப்பல் சேவையை எதிர்வரும் மார்ச் மாதத்திலிருந்து ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அது தொடர்பில் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு வழங்கப்பட்டுள்ள பணிப்புரைக்கமைய அதற்கான பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டு மாநில அரசாங்கத்துடன் அது தொடர்பில் ஏற்கெனவே பேச்சுவார்த்தைகள் இராஜதந்திர மட்டத்தில் நடைபெற்று வருவதுடன் அது தொடர்பில் சாத்தியமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளதையடுத்து எதிர்வரும் மார்ச் மாதத்தில் இந்த படகு சேவையை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கப்பல் சேவையை ஆரம்பித்ததன் பின்னர் காங்கேசன்துறை அல்லது மன்னாரில் குடிவரவு குடியகல்வு நிலையம் ஒன்றை ஸ்தாபித்தல் மற்றும் சுங்க அலுவலகத்தை ஸ்தாபித்தல் அத்துடன் துறைமுக அதிகார சபையின் மத்திய நிலையம் ஒன்றை ஸ்தாபித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கும் சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அதிகாரிகளுக்குமிடையில் இந்த வருடத்தின் முதல் பகுதியிலேயே பேச்சுவார்த்தையொன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அடகு வைத்த நகைகளை மீட்க வழியின்றி இழக்கும் மக்கள்

(கொழும்பு)

கடந்த காலங்களில் வங்கிகள் மற்றும் அடைமான மையங்களில் அடைமானம் வைக்கப்பட்ட நகைகளில் சுமார் எழுபது சத விகிதம் விற்பனையாகியுள்ளதாக அடைமான நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

- நாட்டில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக அடகு வைக்கப்பட்ட நகைகளை மீட்க பணமின்றி நகைகளை இழக்கும் போக்கு அதிகரித்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, இந்த வருடத்தின் முதல் பத்து மாதங்களில் நாடு முழுவதும் சுமார் 40 இலட்சம் பேர் 19,300 கோடி ரூபாய் பெறுமதியான நகைகளை வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் அடகு வைத்துள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளியியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்து கோரல தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# யாத்திரீகர் குழுவை ஏற்றிச் சென்ற பேருந்து விபத்து-பலர் காயம்

## புத்தாண்டு தினத்தில் விபரீதம்



(கொழும்பு)

கதிர்காமத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பேருந்து ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த சாரதியுடன் காயமடைந்த பயணிகள் காலி கராப்பிட்டிய போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கராப்பிட்டிய வைத்தியசாலை பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் 11 ஆண்களும் 4 பெண்களும் மூன்று குழந்தைகளும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பத்தேகம மற்றும் பின்னதுவ இடையே 88 ஆவது கிலோமீற்றர் தூணுக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

யாத்திரீகர்கள் குழுவை ஏற்றிச் சென்ற பேருந்தே விபத்துக்குள்ளானது. (நி)

# திருவெம்பாவை விரதத்தை முன்னிட்டு நடைபெற்ற பாத யாத்திரை

(யாழ்ப்பாணம்)



அகில இலங்கை சைவ மகா சபையினரால் வருடா வருடம் திருவெம்பாவை விரதத்தை முன்னிட்டு முன்னெடுக்கப்படும் பாதயாத்திரை மாதகல் சம்பில் துறை சம்புநாத ஈஸ்வரத்திலிருந்து காரைநகர் ஈழத்து சிதம்பரத்தை நோக்கி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் ஆரம்பமாகியது.

இப் பாத யாத்திரை சாந்தை சிதம்பரேஸ்வரர் ஆலயம், சாந்தை வீரபத்திரர் ஆலயம், பனிப்புலம் முத்துமாரியம்மன் ஆலயம், சுழிபுரம் பறாளாய் பிள்ளையார் முருகன் ஆலயம், சுழிபுரம் மத்தி கறுத்தனாத் தோட்டம் துர்க்கையம்மன் ஆலயம், சுழிபுரம் மேற்கு ஹரிகர புத்திர ஐயனார் ஆலயம், சுழிபுரம் மேற்கு கதிர்வேலாயத சுவாமிகள் ஆலயம், சுழிபுரம் பெரியபுலோ வைரவர் ஆலயம், மூளாய் வதிரன்புலோ பிள்ளையார் முருகன் ஆலயம், மூளாய் இராவணேசுவரர் ஆலயம், வலந்தலை மடத்துக்கரை முத்துமாரியம்மன் ஆலயம் ஆகிய திருத்தலங்களை தரிசித்தவாறு காரை நகர் ஈழத்து சிதம்பரத்தை சென்றடைந்து நிறைவு பெற்றது. (நி-33)

# முட்டை பிரச்சினைக்கு முடிவில்லை எனில் பாண் விலை மேலும் உயரலாம்

## பேக்கரி உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

முட்டை தட்டுப்பாடு மற்றும் விலையுயர்வு ஆகிய பிரச்சினைகளுக்கு இவ்வார காலத்துக்குள் தீர்வு காணாவிட்டால், பாண் உட்பட பேக்கரி உணவுப் பொருட்களின் விலையை அதிகரிக்க நேரிடும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இதனை தெரிவித்துள்ளார். இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்தாவது முட்டைகளை இறக்குமதி செய்து, நிவாரண விலைக்கு விநியோகிக்க வேண்டும் என அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளோம்.

உற்பத்தி செய்யப்படும் முட்டைகளும் 70 ரூபாவை அண்மித்துள்ளது. அதிக விலைக்கும் முட்டைகளை கொள்வனவு செய்ய முடியாத நிலை பேக்கரி தொழிற்துறைக்கு ஏற்பட்டுள்ளது.

முட்டை தட்டுப்பாடு மற்றும் விலையுயர்வு ஆகிய பிரச்சினைகளுக்கு இவ்வார காலத்துக்குள் தீர்வு காணாவிட்டால், பாண் உள்ளிட்ட பேக்கரி உணவுப் பொருட்களின் விலையை மீண்டும் அதிகரிக்க நேரிடும் என்றும் தெரிவித்துள்ளார். (நி)

# புதுவருடத்தை வரவேற்க காலி முகத்திடலில் திரண்ட மக்கள்



(கொழும்பு)

பிறந்துள்ள புதுவருடத்தை பல நாடுகளில் உள்ள மக்கள் மிகுந்த சந்தோசத்துடன் வரவேற்று கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர்.

பொருளாதாரப் பாதிப்புக்களுக்கு மத்தியிலும், இலங்கையில் புது வருடக் கொண்டாட்டங்கள் பல இடங்களில் இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது.

அந்தவகையில், பிறந்துள்ள 2023 ஆம் ஆண்டை வரவேற்க பல்லாயிரக்கணக்கான மக்கள் கொழும்பு, காலி முகத்திடலில் நேற்று முன்தினம் இரவு ஒன்று திரண்டு வரவேற்றுள்ளனர். (நி)

# புத்தாண்டுக்கு புடவை வாங்கச்சென்ற தாயும் மகளும் கோர விபத்தில் பலி

(கொழும்பு)

புத்தாண்டுக்கு புடைவை கொள்வனவு செய்யச் சென்ற தாயும் மகளும் நேற்று இரவு கோர விபத்தில் பலியான துயர சம்பவம் நீர்கொழும்பு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

முச்சக்கர வண்டியும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் நீர்கொழும்பைச் சேர்ந்த 45 வயதுடைய தாயும் 17 வயதுடைய மகளுமே உயிரிழந்தவர்களாவர்.

புத்தாண்டுக்கு ஆடைகளை கொள்வனவு செய்ய மோட்டார் சைக்கிளில் சென்றவேளை இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் முச்சக்கர வண்டி சாரதியும் அதில் பயணித்த மற்றும் இருவரும் காயமடைந்த நிலையில் நீர்கொழும்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் நீர்கொழும்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேருக்கு நேர் மோதவுள்ள இரு துருவங்களின் போட்டி

## இரசிகர்களிடையே பரபரப்பு




சிறந்த கால்பந்து நட்சத்திரங்களாக அறியப்படும் மெஸ்ஸி, ரொனால்டோ இருவரும் இம்மாதம் நட்பு ரீதியாக போட்டியொன்றில் விளையாடவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

லியோனல் மெஸ்ஸி மற்றும் கிறிஸ்டியானோ ரொனால்டோ ஆகிய இரு நட்சத்திர வீரர்களும் 2023 ஆம் ஆண்டில் இரண்டு வெவ்வேறு கண்டங்களுக்காக விளையாடுகிறார்கள்.

பாரிஸ் செயின்ட் ஜெர்மைனில் மெஸ்ஸி தனது ஒப்பந்தத்தை ஒரு வருடத்திற்கும், சவுதி அரேபிய கிளப் அல் நஸ்ருடன் இரண்டரை ஆண்டு ஒப்பந்தத்தில் ரொனால்டோவும் கைச்சாத்தியுள்ளனர்.

இந்நிலையில் எதிர்வரும் 19 ஆம் திகதி இரு அணிகளுக்கு இடையில் போட்டி இடம் பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், இந்த ஆண்டில் முதல் முறையாக இரு ஜாம்பவான்களும் நேருக்கு நேர் மோத உள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# சகவீரரின் சாதனையை முறியடித்த வில்லியம்சன்



பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இரட்டை சதம் விளாசிய கேன் வில்லியம்சன், முன்னாள் வீரர் பிரண்டன் மெக்கல்லத்தின் சாதனையை தகர்த்தார்.

கராச்சியில் நடந்து வரும் பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில், நியூசிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 612 ஓட்டங்கள் குவித்து டிக்ளேர் செய்தது. நியூசிலாந்தின் அனுபவ வீரர் கேன் வில்லியம்சன் இரட்டை சதம் விளாசினார்.

இது அவருக்கு டெஸ்ட் கிரிக்கெட்டில் 5 ஆவது இரட்டை சதம் ஆகும். இதன்மூலம் அதிக இரட்டை சதங்கள் விளாசிய நியூசிலாந்து வீரர் என்ற ஜாம்பவான் வீரர் பிரண்டன் மெக்கல்லத்தின் சாதனையை அவர் முறியடித்தார்.

பிரண்டன் மெக்கல்லம் நான்கு முறையும், ரோஸ் டெய்லர் மற்றும் ஸ்டீபன் பிளம்மிங் தலா மூன்று முறையும் இரட்டை சதம் விளாசியுள்ளார். (6)

# மான்செஸ்டர் யுனைடெட் வெற்றி

பிரீமியர் லீக் தொடரில் மான்செஸ்டர் யுனைடெட் அணி 1-0 என்ற கணக்கில் வோல்ஸ் அணியை வீழ்த்தியது.

இங்கிலாந்தின் Molineux மைதானத்தில் நடந்த போட்டியில் மான்செஸ்டர் யுனைடெட் மற்றும் வோல்ஸ் அணிகள் மோதின.

முதல் பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்காததால் சமனில் இருந்தது. பிற்பாதியில் மான்செஸ்டர். அணியினர் ஆக்ரோஷம் காட்ட ஆட்டத்தின் 76 ஆவது நிமிடத்தில் மான்செஸ்டர் அணியின் மார்கஸ் ராஷ்ஃபோர்ட் மிரட்டலாக கோல் அடித்து எதிரணியின் ஐந்து வீரர்களை கடந்து, மின்னல் வேகத்தில் செயற்பட்ட ராஷ்ஃபோர்ட் லாவகமாக பந்தை வலைக்குள் தள்ளி அனுப்பினார்.

அந்த கோல் மான்செஸ்டர் அணியின் வெற்றிக்கான கோலாக மாறியது. மான்செஸ்டர் யுனைடெட் அணிக்காக ராஷ்ஃபோர்ட் அடிக்கும் 65 ஆவது கோல் இதுவாகும்.

ஆட்டநேர முடிவில் மான்செஸ்டர் யுனைடெட் அணி 1-0 என்ற கோல்கணக்கில் வோல்ஸ் அணியை வீழ்த்தியது. புள்ளிப் பட்டியலில் 4 ஆவது இடத்தில் இருக்கும் மான்செஸ்டர் யுனைடெட் அணிக்கு இது 10 ஆவது வெற்றி ஆகும். (6)




# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2744

கிரிஷ்





பவித்திரா





கிஷாந்




வினோஜா




லிஷாய்னன்




தனுசா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் குடிநீர் கட்டணமும் அதிகரிக்கப்படும்

## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை

(கொழும்பு)

மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்படுமாயின் அதேநேரத்தில் நீர்க்கட்டணத்தையும் அதிகரிக்க நேரிடும் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

குடிநீர் பம்ப் செய்ய மின்சாரம் பயன்படுத்தப்படுவதால் தண்ணீர் கட்டணத்தை உயர்த்த வேண்டும்.

எவ்வாறாயினும், நீர் விநியோகத்திற்கான மின் கட்டணத்திற்கு நிவாரணம் வழங்கினால், நீர் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய அவசியமில்லை.

எனினும் இது தொடர்பாக இறுதி முடிவு இதுவரையில் எட்டப்படவில்லை என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. (நி)

# குறைந்த வருமானம் பெறுவோருக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் ஆராய்வு

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

(கொழும்பு)

பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

குறைந்த வருமானம் பெறும் பிரிவினர் மற்றும் 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு சில திட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், பொருளாதார நெருக்கடியின் முக்கிய சிக்கலைத் தீர்த்த பிறகு, இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டார். (நி)

## அதிபர், ஆசிரியர்களுக்கான

# கடன் வட்டி வீதம் அதிகரிப்பிற்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் எதிர்ப்பு

(கொழும்பு)

அதிபர் - ஆசிரியர்களுக்கான குருசெத்த கடனுக்கான கடன் மற்றும் வட்டி தவணைகளை செலுத்தும் போது 9.5 சதவீதமாக இருந்த வட்டியை 15.5 சதவீதம் வரை அதிகரிக்க எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

ஊடகங்களுக்கு கருத்துரைத்துள்ள அந்த சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ள இந்த சந்தர்ப்பத்தில், அரச வங்கிகள் மூலம் குருசெத்த கடன் திட்டத்தின் கீழ் குருசெத்த கடனுக்கான வட்டியை அதிகரிக்க வங்கிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட பாதீட்டு திட்டத்தில் அதிபர் ஆசிரியர்களுக்கு எவ்வித மான கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அந்த சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சாரதி, நடத்துநர்கள் இல்லை

## பேருந்து சேவைகள் முடங்கும் அபாயம்

(கொழும்பு)

சாரதி, நடத்துநர்களின் வெற்றிடங்கள் காரணமாக நாளாந்தம் 800 பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவையின் ஒப்புதலின் பேரில் ஆட்சேர்ப்பு நடைபெறும் என்றும் அதற்கான ஒப்புதலுக்காக காத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இதுவரையில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான சுமார் 1,200 பேருந்துகள் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தபடுவதாகவும் அவர் தெரிவித்தார். (நி)


# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மகளாய் மண்ணில் 04 . 03 . 1951

நினைவாய் நெஞ்சில் 13 . 01 . 2022



அமரர். சிவம் கனகம்மா

திதி:- பூர்வபக்க ஏகாதசி (வைகுண்ட ஏகாதசி) (02.01.2023)

அன்பான பேச்சும் அழகான திருமுகமும்
நெஞ்சோடு நிலைத்த நினைவுகளாய் மிகுந்திருக்க
விஞ்சுதுயர் தனைத் தந்து விண்ணேகி சென்று நீ
மிஞ்சியேம் நாட்களிலே மிகுதுயரை தந்தாயோ

இதயம் கனக்கிறது இழந்துவிட்ட நின் பிரிவால்
உதயங்கள் பல கடந்து ஓராண்டு நிறைந்ததுவோ
மனதில் மறையாத மாணிக்க திருவிளக்கே
மறுமுறை காணவந்தன் திருமுகந்தான் வாராதோ

(13900)

முத்துமாரி அம்மன் கோவிலடி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

குடும்பத்தினர்.



# மூன்றாம் ஆண்டு நினைவு நாள்

அமரர். கணபதிப்பிள்ளை
திருமலைச்செல்வம் (செல்லா)
(உரிமையாளர், செல்லா டிஜிற்றல் வீடியோ நவிண்டில்)

மலர்வு - 19.05.1968 உதிர்வு: 02.01.2020



நீள நினைத்திருப்போம்

இட்டு நிரப்ப முடியா உறவாய் எம் மனதைத்
தொட்டுச் சென்ற தோழா. இனிய உணர்வாய்
உள்ளத்துள் உறவாடி இனிய மொழி பேசி
இதயத்துள் உலவு தோழா. எங்கும் நிறைந்த
இறைவன் ஒளியாய் தன்னேரில்லாப்
புகைப்படக் கலைஞனாய் எங்கும் உன்றன்
கைவண்ணம் நேசா. தெளிந்தான் கண்
ஐயுறவில்லா இருளற்ற உன் பாசம்
எம் சுவாசம் உள்ளவரை நீண்டு நிலைத்திருக்கும்

ஊழியர்கள்:- க.ஹேமச்சந்திரன், தி.செல்வக்குமார், ஆ.சுலக்ஷன்.

(C-5719)


# இராசிபலன்

02.01.2023
மார்கழி 18, திங்கட்கிழமை
ஏகாதசி முன்னிரவு 11.33 மணிவரை
பரணி பிற்பகல் 5.47 மணிவரை

சுபநேரம் 12.30-2.00 மணிவரை
இராகுகாலம் 8.00-9.30 மணிவரை
சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம்
கார்த்திகை விரதம்

சந்திராஷ்டமம் - அத்தம், சித்திரை

வளவன்

**மேஷம்:** நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை கூடும்.

**கடகம்:** கண்ணியம்மிக்க ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், தலைமைப் பொறுப்புக்கள் உங்களை தேடி வரலாம், ஒளிமயமான வாழ்க்கைக்கு உறுதுணை புரியும் நாள், போசன சுகமுண்டு.

**துலாம்:** பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நண்பர்கள் வழியில் நன்மைகள் நடைபெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்:** வரவேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பயணங்கள் கைகூடும்.

**ரிஷபம்:** பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், வெளியூர் தொடர்புகள் அதிகரிக்கும், வழிபாட்டுச்சிந்தனை மேலோங்கும் நாள்.

**சிம்மம்:** உள்ளன்போடு பழகியவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், மறைமுக எதிர்ப்புக்கள் அகன்று வியாபார விருத்தி ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு, புதிய முயற்சிகள் கைகூடும்.

**விருச்சிகம்:** பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், ஆரோக்கியம் சீராகும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** எதற்காகவும் வீண் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் எதிர்பார்த்தபடியே கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கன்னி:** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், தொழிலில் அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் பொருள் வரவைப் பெருக்கிக் கொள்வீர்கள், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

**மீனம்:** விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரையும் எளிதாக நம்பாதே, யாரையும் எளிதாகச் சந்தேகப்படாதே.

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## ஆதன ஒருங்கிணைப்பும் பெயர் மாற்றமும்

சாவகச்சேரி நகராட்சி ஆளுகைக்குட்பட்ட வட்டாரம்: 09 கண்டி வீதி, 203,205 மற்றும் 205 A என்னும் வரிமதிப்பீட்டு இலக்கங்களை உடைய ஆதனம் ஸ்றீவின் முருகப்பர் விசுவலிங்கம் என்னும் பெயரில் ஆதனவரிப் பெயரேட்டில் பதியப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட தாய் உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை சாவகச்சேரி, விஸ்வநாதர் முருகப்பர் பிரசித்த நொத்தாரிஸ் சின்னத்தம்பி கந்தர் முகதாவில் 1920.06.24 ஆம் திகதியிடப்பட்ட 12526 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் ஏக்கர் 2 பேர்ச்சஸ் 7 1/2 இதில் தென்கிழக்குப் பக்கமாக நிலப்பரப்பு ஆறு (06), ஸ்றீவின் முருகப்பர் விசுவலிங்கத்துக்கு அறுதியாக வழங்கியுள்ளனர்.

சாவகச்சேரி வைத்திலிங்கம் அருணாசலம் நமசிவாயம் பிரசித்த நொத்தாரிஸ் S.K.திரவிய நாயகம் முகதாவில் 29.03.1942 ஆம் திகதியிடப்பட்ட 131 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் ஏக்கர் 2 பேட்ச்சஸ் 7 1/2 இதில் வடகிழக்குப் பக்கமாக நிலப்பரப்பு ஐந்து (05) இதில் சொரியலாய் அரைவாசி ஏக்கர் (1/2), ஸ்றீவின் முருகப்பர் விசுவலிங்கத்துக்கு அறுதியாக வழங்கியுள்ளனர்.

சாவகச்சேரி தெற்கு வைத்திலிங்கம் முத்துக்குமாரு பிரசித்த நொத்தாரிஸ் S.K.திரவிய நாயகம் முகதாவில் 18.11.1942 ஆம் திகதியிடப்பட்ட 225 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் ஏக்கர் 2 பேட்ச்சஸ் 7 1/2 இதில் வடக்குப் பக்கமாக நிலப்பரப்பு நான்கு (04), ஸ்றீவின் முருகப்பர் விசுவலிங்கத்துக்கு அறுதியாக வழங்கியுள்ளனர்.

பின்னர் NICHOL PARADE STRATHFIELD NSW 2135, AUSTRALIA, கிரிசாந்த பினோஜன் விஸ்வலிங்கம் பிரசித்த நொத்தாரிஸ் அமிதா அமரசேன முகதாவில் 03.11.2011 ஆம் திகதியடப்பட்ட 911 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் MARY THIRAVIAM VISVALINGAM என்பவருக்கு வழங்கியுள்ளனர்.

பின்னர் NICHOL PARADE STRATHFIELD NSW 2135, AUSTRALIA, கிரிசாந்த பினோஜன் விஸ்வலிங்கம் என்பவர் N0 25, FIRST LANE, RATMALANAI, PANCHERINE GUNASHNI VATHANITA DIAS பிரசித்த நொத்தாரிஸ் அமிதா அமரசேன முகதாவில் 31.05.2022 ஆம் திகதியிடப்பட்ட அற்றோனித்தத்துவம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பின்னர் NICHOL PARADE STRATHFIELD NSW 2135, AUSTRALIA, கிரிசாந்த பினோஜன் விஸ்வலிங்கம் என்பவர் அற்றோனித்தத்துவக்காரனான N0 25, FIRST LANE, RATMALANAI, PANCHERINE GUNASHNI VATHANITA DIAS பிரசித்த நொத்தாரிஸ் திரு.அருட்பிரகாசம் நிறோஷன் முகதாவில் 08.07.2022 ஆம் திகதியிடப்பட்ட 311 ஆம் இலக்கத்தில் ஏக்கர் 2 பேட்ச்சஸ் 7 1/2 இதில் தென்கிழக்குப் பக்கமாக நிலப்பரப்பு ஆறு (06), ஏக்கர் 2 பேட்ச்சஸ் 7 1/2 இதில் வடகிழக்குப் பக்கமாக நிலப்பரப்பு ஐந்து (05) இதில் சொரியலாய் அரைவாசி (1/2), ஏக்கர் 2 பேட்ச்சஸ் 7 1/2 இதில் வடக்குப் பக்கமாக நிலப்பரப்பு நான்கு (04) என திருத்தல் சாதனம் உறுதி மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பின்னர் NICHOL PARADE STRATHFIELD NSW 2135, AUSTRALIA, கிரிசாந்த பினோஜன் விஸ்வலிங்கம் என்பவர் அற்றோனித்தத்துவக்காரனான N0 25, FIRST LANE, RATMALANAI, PANCHERINE GUNASHNI VATHANITA DIAS பிரசித்த நொத்தாரிஸ் திரு.அருட்பிரகாசம் நிறோஷன் முகதாவில் 08.07.2022 ஆம் திகதியிடப்பட்ட 312 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் இராஜேந்திரன் இராஜ்குமார் என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று சாவகச்சேரி இறை, "காட்டுக்காணி" நிலப்பரப்பு பன்னிரெண்டரை (12 1/2). இவ் ஆதனம் உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு.R.இராஜகோபாலு அவர்களால் 2022.04.28 ஆம் திகதியன்று 1099ம் இலக்க அளவைப் படத்தின்படி துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ள நிலப்பரப்பு பதினொன்று (11) குளி பதினாறு தசம் பூச்சியம் ஆறு (16.06). இதற்கு எல்லைகள்.

வடக்கு: முத்துக்குமாரு சிறீதரன் மற்றும் ஏனையவர்களின் ஆதனம் மற்றும் காளி கோவிலின் கட்டம்

கிழக்கு: யாழ்ப்பாணம் கண்டி வீதி

தெற்கு தென்மராட்சி பிரதேச செயலகம்

மேற்கு முத்துக்குமாரு சிறீதரனின் ஆதனம்.

இவ்வாதனம் தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றில் நடைபெற்ற தத்துவம் 224 என்ற வழக்கில் 1987.01.06 ஆம் திகதியன்று நிர்வாகப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் கேவியற் தடை சாதன பதிவுச் சட்டத்தின் பகுதி 32 இன் பதிவின்படி இல.38, முகந்திரம் வீதி, கொழும்பு 03 ஐச் சேர்ந்த வசந்ததேவி தனராஜ் (596031730V) என்பவராலும் இல.143/14, காலி வீதி, கொழும்பு 03 ஐச் சேர்ந்த அஜந்தாதேவி சரவணபாலன் (688323916V) என்பவரால் 2020.07.06 இலிருந்து இரண்டு வருடங்களுக்கு அமுலில் இருக்கும் படி தடை செய்யப்பட்டுள்ளது.

தற்போது இராஜேந்திரன் இராஜ்குமார் இவ்வாதனத்தை ஆதன உப பிரிவிடலும் ஆதனப் பெயர் மாற்றமும் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக ஆவணங்களை சமர்ப்பிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கு உப பிரிவிடலும் ஆதனப் பெயர் மாற்றமும் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ் உப பிரிவிடல் மற்றும் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சிமன்றம் பொறுப்பாளி அல்ல என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி.** (C-13994)

# தேசிய நடனப் போட்டியில் சாதனை படைத்த யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவிகள்



(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட தேசிய நடனப் போட்டியில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் சாதனை படைத்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை அநுராதபுரத்தில் இடம்பெற்ற தேசிய நடனப் போட்டியில் மேற்படி கல்லூரியைச் சேர்ந்த மாணவிகளான லாவணியா தட்சணாமூர்த்தி தனி ஜதீஸ்வரத்தில் முதலாம் இடத்தினையும், நிவேதனா பிரபாகரன் தனிபதம் முதலாம் இடத்தினையும் பெற்றுள்ளனர்.

மேலும், ராகவி கலைதாசன், நிவேதனா பிரபாகரன், யதுர்ஷினி குணநேசன், ருக்ஷிகா இராஜரட்ணம், சியானா இராஜேந்திரன், லிதுனா சுரேஸ்குமார், ஷன்ஜா கிருபாகரன் ஆகியோர் பங்குபற்றிய குழு வர்ணம் முதலாம் இடத்தினையும் பெற்று சாதனை படைத்துள்ளது. (நி-6-33)

# போதை மாத்திரையுடன் இளைஞர்கள் இருவர் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் போதை மாத்திரையுடன் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

வவுனியா நெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது நெளுக்குளம் பகுதியில் போதை மாத்திரையுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளையடுத்து குறித்த இளைஞருக்கு போதை மாத்திரைகளை விநியோகம் செய்தவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இருவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (நி-6-250)

# திடீர் தீப்பரவலால் ஏற்பட்ட விபத்தில் தீக்கிரையான மோட்டார் சைக்கிள்



(குருமன்காடு)

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் திடீரென தீப்பற்றிய மோட்டார் சைக்கிள் ஒன்று முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளதுடன், மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையம் மீது ஏற்பட்ட தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

புதுவருட தினமான நேற்று இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பிளசர் ரக மோட்டார் சைக்கிள் ஒன்று இயங்கவில்லை எனத் தெரிவித்து வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் உள்ள மோட்டார் சைக்கிள் திருத்துமிடம் ஒன்றின் முன்பாக குறித்த மோட்டார் சைக்கிளை நிறுத்தி அதனை இயங்கச் செய்த வேளைமோட்டார் சைக்கிள் திடீரென தீ பிடித்து எரிந்துள்ளது.

இதன்போது தீ பிடித்த மோட்டார் சைக்கிளில் இருந்து மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையத்திற்கும் தீப் பிடித்த நிலையில் அங்கு நின்றவர்கள் அதனை கட்டுப்படுத்தியதுடன், தீப்பிடித்த மோட்டார் சைக்கிளை வீதியில் இழுத்துப் போட்டனர். (நி-6-250)

# தேவாலயத்திற்கு பக்தர்களை ஏற்றிச் சென்ற பேருந்து மீது தாக்குதல்

(அராலி)

சுழிபுரம் - பாண்டவட்டை பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்தில் உள்ள தேவாலயம் ஒன்றிற்கு பக்தர்களை ஏற்றிச் சென்ற பேருந்து மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் பகுதியில் வைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. இதன்போது பேருந்தில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் பேருந்தின் கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு தகவல் வழங்கப்பட்டது. அதனையடுத்து அவர்கள் அங்கு வந்ததால் அப்பகுதியில் மிகுந்த பதற்றம் நிலவியது.

இச்சம்பவம் குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-6-194)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் புதுவருட தினத்தன்று போராட்டம் முன்னெடுப்பு



(குருமன்காடு)

புதுவருட தினத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று வவுனியாவில் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

வவுனியா, ஏ-9 வீதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முன்பாக 2142 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தாய்மாரால் குறித்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட மற்றும் வெள்ளை வானில் கடத்தப்பட்ட தமது பிள்ளைகளுக்கு நீதி தேவை என்பதோடு அவர்களை விடுவிக்க வேண்டும் எனவும் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இறையாண்மையுடனான தீர்வே பாதிக்கப்பட்டோருக்கு தேவை என தெரிவித்து மாதிரி வாக்களிப்பையும் மேற்கொண்டிருந்தனர். (நி-6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டுப் பலன்கள்

## 01.01.2023-31.12.2023

# வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வழி பிறக்கும்!

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



**தும்பிக்கையானை வழிபட்டால் நம்பிக்கை யாவும் நடைபெறும் மேஷ இராசி வாசகர்களே!**

வந்துவிட்டது புத்தாண்டு. வருடத் தொடக்கமே உங்களுக்கு வசந்த காலமாக அமையப்போகிறது. சனி, குரு, இராகு, கேது ஆகியவற்றின் கிரகப் பெயர்ச்சிகள் மூலம் முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கப்போகிறீர்கள். தானாதிபதி சுக்கிரனும் தொழில் ஸ்தானாதிபதி சனியும் ஒன்றாக இணைந்து தொழில் ஸ்தானத்திலேயே சஞ்சரித்தபடி ஆண்டு தொடங்குகிறது. எனவே தொழில் வளம் சிறப்பாக இருக்கும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். எதிர்பார்த்த காரியங்கள் எளிதில் நடைபெற இறைவழிபாடு கைகொடுக்கும். புத்தாண்டின் கிரகநிலையையும் சுய ஜாதக கிரக நிலையையும் ஆராய்ந்து, திசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளை மேற்கொண்டால் ஆண்டு முழுவதும் அற்புதமான பலன்கள் கிடைக்கும்.

### புத்தாண்டு கிரக நிலை

புத்தாண்டு தொடக்கத்தில் ஜென்மத்தில் இராகுவும் 7 இல் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். இராசி நாதன் செவ்வாய், தனஸ்தானத்தில் வக்கிரம் பெற்று சஞ்சரிக்கிறார். 9 ஆம் இடத்தில் சூரியன், புதன் இணைந்து "புத ஆதித்ய யோகம்" உருவாகின்றது. தொழில் ஸ்தானத்தில் சனி பலம் பெற்று, தன -சப்தமாதிபதி சுக்கிரனோடு இணைந்திருக்கிறார். விரய ஸ்தானத்தில், விரயாதிபதி குரு சொந்த வீட்டில் பலம் பெற்றுச் சஞ்சரிக்கிறார். குருவின் பார்வை 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிவதால், அதன் பார்வைக்குரிய பலன் நன்மையாகவே கிடைக்கும். குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. புதிய வாகனம் வாங்கும் எண்ணம் நிறைவேறும். உத்தியோகத்தில் தற்காலிகப் பணியில் உள்ளவர்களுக்கு, பணிநிரந்தரம் கிடைக்கும். வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வழிபிறக்கும். விரய ஸ்தானத்தில் குரு சஞ்சரிப்பதால் விரயங்கள் கூடும். என்றாலும் தன வரவும் வந்து கொண்டேயிருக்கும். மருத்துவச் செலவை குறைக்க, ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை.

### கும்ப - சனி சஞ்சாரம்

29.3.2023 அன்று சனிபகவான், அவிட்டம் 3 ஆம் பாதத்தில் கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிறார். 24.8. 2023 அன்று மகரத்திற்கு வக்கிர இயக்கத்தில் வரும் சனிபகவான், 20.12. 2023 அன்று மீண்டும் கும்ப இராசிக்குச் செல்கிறார். இடையில் வக்கிர இயக்கத்தில் கும்ப இராசியில் சஞ்சரிக்கும் பொழுதும், மகர இராசியில் சஞ்சரிக்கும் பொழுதும் எண்ணற்ற மாற்றங்களை ஏற்படுத்துவார். தொழில், லாப ஸ்தானத்திற்கு அதிபதியான சனி வக்கிரமாக இருக்கும் போது, வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்படும். ஆனால் அதை சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. திட்டமிட்ட காரியங்கள் சிறப்பாகவே நடைபெறும். சனியின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் ஆரோக்கியத்தில் மட்டும் அக்கறை அவசியம். சிறு உடல் உபாதை ஏற்படும் போதே மருத்துவ ஆலோசனை பெறுவது சிறந்தது.

### மேஷ - குரு சஞ்சாரம்

22.4.2023 அன்று குரு பகவான், அச்சுவினி நட்சத்திரம் முதல் பாதத்தில் மேஷ இராசிக்கு பெயர்ச்சியாகிறார். அவரது பார்வை 5, 7, 9 ஆகிய இடங்களில் பதிகிறது. உங்கள் இராசியைப் பொறுத்தவரை ஜென்ம குருவாக இருந்தாலும், அவர் பார்க்கும் இடங்கள் பலம் பெறும். 5 ஆம் இடத்தை குரு பார்ப்பதால், முன்னோர் சொத்துக்களில் முறையான பங்கீடு கிடைக்கலாம். செல்வாக்கான நிலையை அடைவீர்கள். பிள்ளைகளுக்குத் தகுந்த வேலை கிடைக்கும். பூர்வ புண்ணிய ஸ்தானம் பலம்பெறுவதால், இதுவரை முயற்சி செய்தும் முடிவடையாத காரியங்கள் இப்பொழுது முடிவடையும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். 7 ஆம் இடத்தில் குரு பார்வை பதிவதால், திருமணம் ஆகாதவர்களுக்கு, அதற்கான வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. ஆடம்பரப் பொருட்களின் சேர்க்கை ஏற்படும். வெளிநாடு செல்லும் முயற்சி வெற்றியாகும். குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு அகலும். குருவின் பார்வை 9 ஆம் இடத்தில் பதிவதால், பெரிய மனிதர்களின் நட்பு கிட்டும். உடன்பிறப்புகள் பாகப்பிரிவினைக்கு ஒத்துவருவர். தந்தை வழி உறவில் நெருக்கம் ஏற்படும். பணிபுரியும் இடத்தில் ஊதிய உயர்வும் சலுகைகளும் கிடைக்கப்பெறும். கடன் சுமை குறையும். தீர்த்த யாத்திரை, தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்துவீர்கள். புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு. பொருளாதார நிலை உயரும்.

### ராகு-கேது பெயர்ச்சி

8.10.2023 அன்று ரேவதி நட்சத்திரம் 4 ஆம் பாதம் மீன இராசியில் ராகுவும் சித்திரை நட்சத்திரம் 2 ஆம் பாதம் கன்னி இராசியும் கேதுவும்




பெயர்ச்சியாகிறார்கள். விரய ஸ்தானத்தில் ராகுவும் 6 ஆம் இடத்தில் கேதுவும் உள்ளனர். ராகுவால் விரயங்கள் அதிகரிக்கலாம். பயணங்களால் பலன் கிடைக்கும். வெளிநாடு சென்று திரும்ப முடியாமல் இருப்பவர்கள், ஊர் திரும்பும் வாய்ப்பும் ஒரு சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பும் அமையும். இட மாற்றம், ஊர்மாற்றம், உத்தியோக மாற்றம் எதிர்பார்த்தபடியே கிடைக்கும். மனப் போராட்டம் அகல நண்பர்கள் உதவி செய்வர். 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் கேதுவால், எதிரிகளின் தொல்லை வரலாம். மறைமுக எதிர்ப்புகள் இருந்தாலும், பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது. இருப்பினும் சற்று கவனமாக செயல்படுவது நல்லது. மனக்குழப்பம் அதிகரிக்கும். ஆரோக்கிய தொல்லையும் அதனால் மருத்துவச் செலவும் கூடும். செலவைக் கட்டுப்படுத்தவும், குடும்ப ஒற்றுமை கூடவும், பணியில் எதிர்பார்த்த பலன் கிடைக்கவும், சர்ப்ப தோஷ பரிகாரங்களை யோக பலம் பெற்ற நாளில் செய்யுங்கள்.

### செவ்வாய்- சனி பார்வை

இந்த ஆண்டில் 4 முறை செவ்வாய் - சனி பார்வைக் காலம் வருகிறது. இது போன்ற காலங்களில் மிகமிக கவனத்தோடு இருக்க வேண்டியது அவசியமாகும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். தன்னம்பிக்கை குறையும். அடுத்தவர்களுக்காக வாங்கிக் கொடுத்த தொகையால் அவதிப்பட நேரிடலாம். இராசி நாதனாக செவ்வாய் இருப்பதால் மனக்குழப்பம் அதிகரிக்கும். குடும்பப் பிரச்சினை கொடிகட்டி பறக்கும். குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு ஆரோக்கியத் தொல்லை வரலாம். "வருமானத்தை சேமிக்க இயலவில்லையே" என்று கவலைப் படுவீர்கள். அனுபவஸ்தர்களின் அறிவுரைகளும், அருளாளர்களின் வழிகாட்டுதலுமே இக்காலத்தை இனிமையாக்கும். வளர்ச்சி தரும் வழிபாடு இந்த ஆண்டு முழுவதும் சதுர்த்தி திதியில் விரதம் இருந்து விநாயகரை வழிபட்டு வாருங்கள். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றியாகும். வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும்.

### சனி மற்றும் குருவின் வக்கிர காலம்

27.6.2023 முதல் 23.8.2023 வரை கும்ப இராசியிலும், 24.8.2023 முதல் 23.10.2023 வரை மகரத்திலும் சனிபகவான் வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 10, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி பகவான் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. தடைகளும் தாமதங்களும் அதிகரிக்கும். முயற்சியில் குறுக்கீடுகள் வரலாம். கூடு பிடித்த வியாபாரம் மந்தநிலைக்கு மாறும். பிறருக்கு பொறுப்பு சொல்வதால் பிரச்சினைகள் உருவாகும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. 12.9.2023 முதல் 19.12. 2023 வரை, மேஷ இராசியில் குரு வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு வக்கிரம் பெறும்போது, நிதானமும் பொறுமையும் தேவை. உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்காது. அலைச்சல் அதிகரிக்கும். ஆதாயம் குறையும். பெற்றோர் வழியில் பிரச்சினைகள் வரலாம். பிடிவாத குணத்தை தளர்த்திக் கொள்ளுங்கள். பணிபுரியும் இடத்தில் கவனம் தேவை. மேலதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவிசாய்க்க மறுப்பர். உங்களுக்கு கிடைக்க வேண்டிய பதவி உயர்வு, சக பணியாளருக்கு போய்ச் சேரலாம். இந்தக் காலகட்டத்தில் பாக்கிய ஸ்தானத்தின் பலமறிந்து, அதற்குரிய வழிபாடுகளை மேற் கொண்டால் வளர்ச்சியில் ஏற்படும் தளர்ச்சி நீங்கும்.

### பெண்களுக்கான பலன்கள்

புதிய திருப்பங்கள் ஏற்படும் புத்தாண்டு இது. விரய குரு, ஜென்ம குருவாக மாறிய பிறகு உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். பொன், பொருள் சேர்க்கை, பூமி வாங்கும் யோகம் உண்டு. கணவன் - மனைவிக்குள் பாசம் கூடும். பிறந்த வீட்டிற்கும், புகுந்த வீட்டிற்கும் பெருமை சேர்ப்பீர்கள். சனிப் பெயர்ச்சிக்குப் பிறகு, தொழில் மற்றும் உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். ராகு-கேது பெயர்ச்சிக் காலத்தில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை மேற்கொள்ளுங்கள். பொதுவாழ்வில் புதிய பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கலாம். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 65





இது வடிகிற வெள்ளம் என்பதும் காவேரிக் கரையில் உள்ளவர்களுக்குத் தெரிந்து போகும். சோழ சாம்ராஜ்யம் இப்போது நாளுக்கு நாள் பெருகும் புதுவெள்ளத்தை ஒத்திருக்கிறது.

இன்னும் பல நூறு வருடம் இது பெருகிப் பரவிக் கொண்டேயிருக்கும். சோழப் பேரரசு இப்போது வளர்பிறைச் சந்திரனாக இருந்து வருகிறது. பௌர்ணமிக்கு இன்னும் பல நாள் இருக்கிறது. ஆகையால் மேலும் மேலும் சோழ மகாராஜ்யம் வளர்ந்து கொண்டேயிருக்கும்."

"இத்தனை நேரம் தங்களுடனே பேசியதற்கு இந்த ஒரு விடயம் தெளிவாகச் சொல்லி விட்டீர்கள். வந்தனம். இன்னும் ஒரு விடயம் மட்டும் முடியுமானால் சொல்லுங்கள். எனக்கு கப்பல் ஏறிக் கடற் பிரயாணம் செய்ய வேண்டும் என்ற விருப்பம் ரொம்ப நாளாக இருக்கிறது"

"அந்த விருப்பம் நிச்சயமாகக் கைகூடும்; நீ சகடயோகக்காரன். உன் காலில் சக்கரம் இருப்பது போலவே ஓயாமல் சுற்றிக் கொண்டிருப்பாய். நடந்து போவாய்; குதிரை ஏறிப் போவாய்; யானை மேல் போவாய்; கப்பல் ஏறியும் போவாய் சீக்கிரமாகவே உனக்குக் கடற் பிரயாணம் செய்யும் யோகம் இருக்கிறது."

"ஐயா! தென்திசைப் படையின் சேனாபதி, தற்சமயம் ஈழத்திலே யுத்தம் நடத்தும் இளவரசர் அருள்மொழிவர்மரைப் பற்றித் தாங்கள் சொல்லக் கூடுமா? கிரகங்களும் நட்சத்திரங்களும் அவரைப் பற்றி என்ன சொல்லுகின்றன?"

"தம்பி! கப்பலில் பிரயாணம் செய்வோர் திசையறிவதற்கு ஒரு காந்தக் கருவியை உபயோகிக்கிறார்கள். கலங்கரைவிளக்கங்களும் உபயோகப்படுகின்றன. ஆனால் இவற்றையெல்லாம்விட, நடுக்கடலில் கப்பல் விடும் மாலுமிகளுக்கு உறுதுணையாயிருப்பது எது தெரியுமா? வடதிசையில் அடிவானத்தில் உள்ள துருவ நட்சத்திரந்தான்.

மற்ற நட்சத்திரங்கள் கிரகங்கள் எல்லாம் இடம்பெயர்ந்து போய்க் கொண்டேயிருக்கும். ஸப்தரிஷி மண்டலமும் திசைமாறிப் பிரயாணம் செய்யும்.

ஆனால் துருவ நட்சத்திரம் மட்டும் இடத்தைவிட்டு அசையாமல் இருந்த இடத்திலேயே இருக்கும். அந்தத் துருவ நட்சத்திரத்தைப் போன்றவர் சுந்தர சோழ சக்கரவர்த்தியின் கடைக்குட்டிப் புதல்வரான இளவரசர் அருள்மொழி வர்மர். எதற்கும் நிலை கலங்காத திடசித்தமுடையவர். தியாகம், ஒழுக்கம் முதலிய குணங்களைப் போலவே வீரபுருஷத்திலும் சிறந்தவர். கல்வியறிவைப் போலவே உலக அறிவும் படைத்தவர்.

பார்த்தாலே பசி தீரும் என்று சொல்லக் கூடிய பால்வடியும் களை முகம் படைத்தவர்; அதிர்ஷ்ட தேவதையின் செல்வப் புதல்வர். மாலுமிகள் துருவ நட்சத்திரத்தைக் குறிகொள்வது போல், வாழ்க்கைக் கடலில் இறங்கும் உன் போன்ற வாலிபர்கள் அருள்மொழிவர்மரைக் குறியாக வைத்துக்கொள்வது மிக்க பலன் அளிக்கும்."

"அப்பப்பா! இளவரசர் அருள்மொழிவர்மரைப் பற்றி எவ்வளவெல்லாம் சொல்கிறீர்கள்? காதலனைக் காதலி வர்ணிப்பது போல் அல்லவா வர்ணிக்கிறீர்கள்?"

"தம்பி! காவிரி தீரத்திலுள்ள சோழ நாட்டில் யாரைக் கேட்டாலும் என்னைப் போலத்தான் சொல்வான்."

"மிக்க வந்தனம் சோதிடரே! சமயம் நேர்ந்தால் உங்கள் புத்திமதியின்படியே நடப்பேன்."

"உன்னுடைய அதிர்ஷ்டக் கிரகமும் உச்சத்துக்கு வந்திருக்கிறது என்று அறிந்து தான் சொன்னேன்."

"போய் வருகிறேன் சோதிடரே. என் மனமார்ந்த வந்தனத்துடன் என்னால் இயன்ற பொன் தனமும் கொஞ்சம் சமர்ப்பிக்கிறேன்; தயவு செய்து பெற்றுக் கொள்ள வேணும். "இவ்விதம் கூறி, ஐந்து கழஞ்சு பொன் நாணயங்களை வந்தியத் தேவன் சமர்ப்பித்தான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பரமார்த்த குரு கதைகள்



### மந்திர சக்தி

(நேற்றைய தொடர்ச்சி)

இப்போது பாருங்கள். நீங்களே இதன் அற்புதச் சக்தியை அறியப் போகிறீர்கள்! ஆனால் நான் சொல்வதைப் போல நீங்கள் செய்ய வேண்டும். தவறினால் இது கம்மாயிருக்காது! என்று பெருமையாகப் பேசினான் அவன்.

நீ சொல்வதைப் போல நாங்கள் செய்கிறோம். "நீ என்ன சொல்கிறாயோ... அதன்படி சத்தியமாகச் செய்வோம்" என்று பயபக்தியோ, உடலை வளைத்து நின்றிருந்தார்கள் ஒவ்வொருவரும்.

"நீங்கள் ஒவ்வொருவராக, உங்கள் தெய்வத்தை மனத்தில் எண்ணிக் கொண்டு, இந்தத் தடியின் முன் வந்து, பணிவாக குனிந்து நிற்க வேண்டும்."

"அப்படியே செய்கிறோம்!" இந்த மந்திரத்தடியால் உங்கள் ஒவ்வொருவர் முதுகிலும் ஒவ்வோர் அடி கொடுப்பேன். முணுமுணுக்காமல் வாங்கிக் கொள்ள வேண்டும்.

"அப்படியே வாங்கிக் கொள்கின்றோம்."

"முதுகில் அடி விழுந்ததும், அவரவர் அவரவருடைய பேரை உரக்கச் சொல்ல வேண்டும்."

"அப்படியே சொல்கிறோம்" அப்புறம் பாருங்கள். என் மந்திரத்தின் அற்புதச் சக்தியால் அந்த ஆறாவது ஆள் உங்களோடு சேர்ந்திருப்பதை!"

"அப்படியே, ஆஹா! ஆஹா!"

"சரி சரி... ஒவ்வொருவராக நான் சொன்னபடி செய்யுங்கள் அப்படியே!"

அப்படியே அவர்கள் ஒருவர் பின் ஒருவர் வந்து முதுகில் ஓங்கி ஓர் அடி வாங்கிக் கொண்டு வலியைப் பொறுத்துக் கொண்டு முணுமுணுக்காமல் தங்கள் பெயர்களை உரக்கக் கூறிவிட்டு ஓடிப் போய் வரிசையாகக் குருவின் பக்கத்தில் நின்று கொண்டார்கள்.

முதலில் பரமார்த்த குரு முன்னே வந்து முதுகில் அடிவிழுந்ததும் "அடியேன் பரமார்த்தகுரு" என்றார். அவரைப் போலவே 'அடியேன் மடையன்' 'அடியேன் மட்டி' 'அடியேன் மூடன்' 'அடியேன் பேதை' 'அடியேன் மிலேச்சன்' என்று ஒவ்வொருவரும் சொன்னார்கள். வரிசையாக நின்று கொண்டிருந்த அவர்களை வழிப் போக்கன் ஒன்று இரண்டு என்று ஆறுபேரும் அங்கே இருப்பதை எண்ணிக்காட்டினான்.

"ஆஹா! ஆஹா! அற்புதம்.. அற்புதம்!" என்று அவர்கள் வியந்தார்கள். அவர்கள் அடைந்த ஆனந்தத்துக்கு அளவே இல்லை. ஒப்புக் கொண்டபடி நாற்பத்தைந்து பணத்தை முடிச்ச விழ்த்துக் கொடுத்தார் குரு நாதர். வழிப்போக்கன் தன் அதிர்ஷ்ட த்தை எண்ணிக் கொண்டு வழிநடந்தான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியே ஆட்சியின் உயிர்.
நடுநிலைமையே நீதியின் உயிர்.
~ ஜஸ்டினியன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# சிறந்த நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

## புத்தாண்டு வாழ்த்தில் பிரதமர் தினேஷ்

(கொழும்பு)

பல சவால்களுக்கு மத்தியிலும் சிறந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் மிகுந்த அர்ப்பணிப்புடன் புத்தாண்டை எதிர்கொள்ள வேண்டும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

குறிப்பாக உணவு பாதுகாப்பு மற்றும் கிராமிய பொருளாதார மறுமலர்ச்சிக்கு முன்னுரிமை அளித்து அனைத்து துறைகளிலும் வளர்ச்சியை அடைய அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

2022 ஆம் ஆண்டு பெரும்பாலான மக்களுக்கு கடினமாக இருந்த போதிலும், பல சவால்களுக்கு மத்தியிலும் சிறந்த நாட்டைக் கட்டியெழுப்ப இந்த புதிய ஆண்டில் ஒன்றிணைய வேண்டும் என்றும் தனது புத்தாண்டு செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார்.

மேலும் இந்த புத்தாண்டில் வளமான நாட்டை உருவாக்குவதில் முக்கிய பங்குவகிக்கும் உள்ளூர் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்கான உத்திகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். (ம-7)

# இந்தியப் பிரதமர் மோடியின் தாய்ப்பாசம் கண்டபோது...

இந்தியப் பிரதமர் மோடி அவர்களின் தாயார் ஹீராபென் அவர்கள் தனது நூறாவது வயதில் கடந்த 30ஆம் திகதி காலமானார்.

அவரின் இறுதிச்சடங்குகள் மிக எளிமையாக நடந்தேறியது.

தவிர, தான் பங்கேற்கவிருந்த அரச நிகழ்வுகள் எதனையும் இரத்துச் செய்ய வேண்டாமெனவும் அவை அப்படியே நடந்தாகட்டும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இதுதவிர, இந்து சமய முறைப்படி கிரியைகள் இடம்பெற்றதுடன் மூங்கில் தடியில் கட்டப்பட்ட பன்னாங்கின் மேல் ஹீராபென் அவர்களின் உடல் வைக்கப்பட்டு, தோளில் சுமந்தவாறு மயானம் கொண்டு செல்லப்பட்டது.

இதில் வியப்புக்குரிய விடயம். பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தனது தாயாரின் உடலைச் சுமந்து சென்றமையாகும்.

அதிலும் பாதணிகள்*ஏதும் அணியாமல் வெறுங்காலுடன் பிரதமர் மோர்டி தன் தாயைச் சுமந்து சென்றதைப் பார்த்தபோது இதயம் நெகிழ்ந்து கொண்டது.

ஆம், பாரத தேசத்தை ஆளும் பிரதமரின் தாயாரின் இறுதிச்சடங்கென்றால், மக்கள் கூட்டம் திரண்டிருக்கும்.

இராணுவ வாகனங்கள் அணிவகுத்திருக்கும். இராஜமரியாதையுடன் அவரின் பூதவுடல் இராணுவ வாகனத்தில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டிருக்கும்.

இந்திய தேசத்தின் அத்தனை அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநிலங்களின் முதலமைச்சர்கள் என ஏகப்பட்டவர்கள் கூடியிருப்பர்.

சுருங்கக்கூறின், பிரதமரின் தாயின் மரணச் சடங்குக்காக இந்திய தேசம் ஒரு நாளேனும் ஸ்தம்பித்திருக்கும்.

ஆனால் இவை எதுவும் நடக்கவில்லை.

மாறாக அரச பணியாளர்கள், அரசியல் தலைவர்கள் தங்களின் வழமையான கடமையைச் செய்தால் அதுபோதும் என்று பிரதமர் மோடி அறிவித்திருந்தார்.

மிகச் சொற்பமானவர்கள் உடனிருக்க; விறகுகள் அடுக்கப்பட்ட சிதையில் ஹீராபென்னின் உடல் வைக்கப்பட்டு அக்கினி மூட்டப்பட்டது.

நூறு வயதில் மரணித்த தன் தாய்க்காக பிரதமர் மோடி அடைந்த துன்பத்தை நூறு கோடி மக்களைக் கடந்து நிற்கும் இந்திய தேசம் மட்டுமல்ல இந்த உலகம் முழுவதும் நெகிழ்ந்தும் வியந்தும் பார்த்தது.

உண்மை. பெற்ற தாயின் உன்னதத்தை பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தன் தாய்ப் பாசத்தின் மூலம் இந்த உலகுக்கு உணர்த்தியுள்ளார்.

இங்குதான் ஞானபூமியாகிய பாரத மாதா, பால் நினைந்து ஊட்டும் தாயானவள் இறைவனிலும் மேலானவள் என்பதை உலகுக்கு உணர்த்தி நிற்கிறது.

இந்த இடத்தில்தான் பெற்ற தாயை முதியோர் இல்லங்களில் சேர்த்துவிட்டு, நிம்மதியாக உறங்குகின்றவர்கள் ஒரு கணம் பிரதமர் நரேந்திர மோடியின் தாய்ப் பாசத்தை கண்டு கொண்டால் அதுபோதும்.

# தொழில்நுட்பவியல் கல்லூரியின் 2023 ஆம் ஆண்டு கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியில் 2023 ஆம் ஆண்டிற்கான NVQ சான்றிதழ் மற்றும் டிப்ளோமா தரம் என அனைத்து வகையான கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அனைத்து முழுநேர கற்கைநெறிகளும் முற்றிலும் இலவசமான நெறிகள் என்பதுடன் தொழில் சார் கற்கை நெறிகளுக்கு மாதாந்தம் நான்காயிரம் ரூபா வரையான உதவு தொகை மற்றும் போக்குவரத்து பருவகால சீட்டு என்பன வழங்கப்படும்.

சான்றிதழ் தர கற்கைகள் பயில விரும்புவோர் பணிப்பாளர் தொழில்நுட்பவியல் கல்லூரி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரடியாகவும் டிப்ளோமா தர கற்கைகள் பயில விரும்புவோர் www.dtet.gov.lk அல்லது mis.dtet.gov.lk எனும் இணையத்தினூடாகவும் 23.01.2023 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் மேலதிக விபரங்களை நேரடியாக தொழில்நுட்பவியல் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்துடன் அல்லது 0212220028, 0212212402 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் அல்லது www.dtet.gov.lk, mis.dtet.gov.lk எனும் இணையங்களினூடாகவும் பார்வையிடலாம். (ம-7)

# பிறப்புச் சான்றிதழில் ஏற்படவுள்ள திருத்தம்

(கொழும்பு)

பிறப்புச் சான்றிதழைப் பெறுவதில் பொதுமக்களுக்கு ஏதேனும் சிரமம் ஏற்பட்டால் எதிர்காலத்தில் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படும் என உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக் பிரியந்த தெரிவித்துள்ளார்.

அரச நிறுவனங்களால் பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை நெறிப்படுத்துவதே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கமாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், பதிவாளர் நாயக திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகளை நெறிப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம் என்றும் தெரிவித்துள்ளார். (ம-7)

# நாட்டில் 1,20,000 பேர் ஹெரோயினுக்கு அடிமை

தேசிய ஆபுத்தான ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் அறிக்கையின்படி, இலங்கையில் கிட்டத்தட்ட 1,20,000 பேர் ஹெரோயின் பயன்படுத்துகின்றனர்.

தலைவர் ஷக்ய நாணயக்கார கருத்துப்படி, கிட்டத்தட்ட 4,00,000 பேர் மரிஜுவானாவை உட்கொள்கிறார்கள்.

சிகரெட் மற்றும் மது பாவனையில் ஒட்டு மொத்தமாக குறைந்துள்ள அதேவேளை, போதைப் பொருள் பாவனையில், குறிப்பாக 'ஐஸ்' பாவனையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

2022 ஆம் ஆண்டில் 'ஐஸ்' எனப்படும் போதைப் பொருளைப் பயன்படுத்தும் 90-100 பேர் மட்டுமே சிகிச்சையை நாடியுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

நாணயக்காரவின் கூற்றுப்படி, ஹெராயின் மற்றும் மரிஜுவானா பாவனையாளர்களில் பெரும்பான்மையானவர்கள் உதவி பெறாமலேயே போதைப்பொருள் பாவனையை விட்டுவிட்டனர். சிகிச்சை மையங்களில் உள்ள வசதிகளை சுமார் 3,000 பேர் மட்டுமே பயன்படுத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

ஒவ்வொரு ஆண்டும், போதைப்பொருள், மது பானம் மற்றும் சிகரெட் பாவனை தொடர்பாக சுமார் 40,000 புதிய அறிக்கைகள் வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ம-7)

# உரிய அனுமதி இன்றி மருந்துகள் இறக்குமதி

## ஔடதங்கள் தயாரிப்பாளர்கள் சபை தெரிவிப்பு

(கொழும்பு)

அதிகளவிலான மருந்து வகைகளை இந்தியாவை சேர்ந்த இரண்டு தயாரிப்பாளர்களிடம் இருந்து கொள்வனவு செய்யும் சர்ச்சைக்குரிய நடவடிக்கை தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும் என இலங்கை ஔடதங்கள் தயாரிப்பாளர்கள் சபை தெரிவித்துள்ளது.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு இலங்கை ஔடதங்கள் தயாரிப்பாளர்கள் சபை அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புதிதாக கொள்வனவு செய்யப்படவுள்ள மருந்து வகைகள் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்யப்படாதவை என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு இறக்குமதி செய்து பயன்படுத்த வேண்டிய மருந்து வகைகள் என்னவென்பதை தீர்மானிக்கும் அதிகாரம் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிற்கே உள்ளது.

இந்த மருந்து வகைகளை தயாரிப்பது தொடர்பில் சுகாதார அமைச்சர் தனிப்பட்ட ரீதியில் இந்தியாவிற்கு சென்று உடன்படிக்கைகளையும் ஏற்படுத்திக்கொண்டுள்ளதாக இலங்கை ஔடதங்கள் தயாரிப்பாளர்கள் சபை அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைமை செயற்பாடுகள் அபாயகரமான முன்னுதாரணத்தை வழங்குவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டின் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் சட்டத்திற்கு அமைவானதா எனவும் அந்த கடிதத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

ஊடகங்கள் இது தொடர்பில் வெளியிட்டுள்ள தகவல்கள் தொடர்பில் தெளிவுபடுத்தல் ஒன்று அவசியம் என இலங்கை ஔடதங்கள் தயாரிப்பாளர்கள் சபை தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பிரதம நிறைவேற்றுஅதிகாரிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திடீரென தீப்பற்றி எரிந்த மோ.சைக்கிள்

(குருமன்காடு)

வவுனியாவில் பயணித்துக் கொண்டிருந்த மோட்டர் சைக்கிள் ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

வவுனியா நகரப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா நகரப் பகுதியில் இருந்து ஏ9 வீதியூடாக பயணித்த மோட்டர் சைக்கிள் ஒன்று நீதிமன்றத்திற்கு முன்பாக சென்று கொண்டிருந்த போது திடீரென தீப் பற்றி எரிந்துள்ளது.

உடனடியாக அதன் சாரதி கீழே குதித்துள்ளதுடன், வீதி யால் சென்றவர்கள் மற்றும் அயலில் இருந்தவர்களின் துணையுடன் தண்ணீர் ஊற்றி தீயை அணைத்து கட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். எனினும் மோட்டர் சைக்கிள் தீயில் எரிந்து பகுதியளவில் சேதமடைந்துள்ளது. (நி-6-250)

# கட்சிகளின் இணைவு அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும்

## சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் சந்திரகுமார் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கட்சிகளின் இணைவு என்பது முக்கியமல்ல அது ஒரு அர்த்தபூர்வமாக இருக்க வேண்டும். தமிழ் கட்சிகளுக்குள் நான் பெரிய கட்சி நீ பெரிய கட்சி என்ற நிலைப்பாடு மாறும் வரை ஒற்றுமையும் இல்லை, தமிழ் மக்களுக்கு விடுதலையும் இல்லை என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்

வவுனியாவில் சமத்துவக் கட்சியின் வன்னி தலைமை அலுவலகம் திறப்பு விழாவின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று உள்ள பெரும்பாலான மக்கள் பிரதிநிதிகள் தமிழ் மக்களின் விடுதலைக்காக போராட்டக் காலங்களில் ஒரு துளி வியர்வை சிந்தாதவர்கள். இவர்கள் தான்அன்று வியர்வை சிந்தியவர்களுக்கு, ஆயுதம் ஏந்திபோராடியவர்களுக்கு.துரோகிகள் என்று பட்டம் வழங்குகின்றவர்களாக காணப்படுகின்றனர். துரோகி பட்டம் வழங்குவதற்கு இவர்களுக்கு என்ன அருகதை உள்ளது. இன்று ஆயுதம்ஏந்திபோராடியவர்கள் துரோகிகள் என்றால் அவர்களை ஆதரித்த மக்களும் துரோகிகளா? எனக் கேள்வி எழுப்பினார். (நி-6-350)



# வர்த்தக நிலையத்திற்குள் பட்டாசு கொழுத்திய வன்முறைக்கும்பல்

(குருமன்காடு)

வவுனியாவில் புதுவருட கொண்டாட்டங்கள் இடம் பெற்று வரும் நிலையில் ஹொரவப்பொத்தானை வீதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றினுள் புகுந்த மது போதையில் இருந்த இளைஞர்களை உள்ளடக்கிய ரவுடிகள் அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பட்டாசுகளை வர்த்தக நிலையத்தினுள் வெடிக்கச் செய்துள்ளனர்.

பட்டாசு வெடித்ததையால் கடையில் பொருட்கள் வைக்கப்பட்டிருந்த முன் பகுதி சிறியளவில் சேதமடைந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக வர்த்தக நிலைய உரிமையாளர் வவுனியா பொலிஸில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-6-250)

# வைகுந்த ஏகாதசி பெருவிழா

(கிளிநொச்சி)

ஸ்ரீ ரங்கநாதப் பெருமான் கோவில் வைகுந்த ஏகாதசிப் பெருவிழா இன்று திங்கட்கிழமை காலை 6 மணிக்கு பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி மாலை 7 மணிக்கு விசேட ஆராதனைகள் நடைபெற்று ஸ்ரீ ரங்கநாதர் பெருமான் வீதி வலம் வந்து நள்ளிரவு 12 மணிக்கு வந்து வைகுந்த வாசல் திறக்கும் வைபவம் நடைபெறவுள்ளது. (4)

# அலுவலகத்திற்குள் புகுந்து கணனிகள், ஆவணங்கள் திருட்டு

(தருமபுரம்)

கிளிநொச்சியிலுள்ள பெண்கள் வாழ்வுரிமை இயக்கத்தின் அலுவலகத்திற்குள் இருந்த 2 கணினி மற்றும் கணினி உதிரிபாகங்கள் உள்ளிட்ட சில ஆவணங்கள் திருடப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை இரவு குறித்த அலுவலகத்தின் ஓட்டினை உடைத்து உட்சென்று குறித்த பொருட்களை எடுத்து சென்றுள்ளனர். குறித்த அலுவலகத்தில் பணம் மற்றும் ஏனைய உலருணவுப் பொருட்கள் காணப்பட்ட நிலையில் குறித்த பொருட்களை மாத்திரம் திருடி சென்றிருப்பது தாம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் போராட்டத்தை நசுக்கும் நோக்குடனும் தங்கள் தொடர்பான தகவல்களை பெறுவதற்கு தான் இவ்வாறு திருடப்பட்டிருக்கலாம் என பெண்கள் வாழ்வுரிமை இயக்கத்தின் இணைப்பாளர் வல்லிபுரம் வாசுகி தெரிவித்துள்ளார். அத்துடன் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளது. (4-6-315-316)




தருமபுரம் பிரதேச மருத்துவமனைக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம் பிரித்தானியா பழைய மாணவர்களால் அன்பளிப்பாக சிறுவர்களுக்கான சுமார் 2 இலட்சம் பெறுமதியான மருந்துப் பொருட்கள் தருமபுரம் பொறுப்பு மருத்துவ அதிகாரியிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது. (படம்- தேவானந்தன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 500 | 550 | 500 | 500 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 380 | 380 | 350 | 350 |
| தக்காளி | 220 | 250 | 240 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| கோவா | 120 | 140 | 180 | 160 |
| கரட் | 200 | 300 | 350 | 400 |
| பூசணி | 200 | 160 | 180 | 240 |
| புடோல் | 300 | 240 | 240 | 250 |
| வாழைக்காய் | 180 | 150 | 140 | 200 |
| சின்ன வெங்காயம் | 650 | 700 | 800 | 800 |
| பெரிய வெங்காயம் | 240 | 180 | 200 | 250 |
| பாகற்காய் | 800 | 600 | 700 | 600 |
| வெண்டக்காய் | 250 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 150 |
| பயற்றங்காய் | 600 | 650 | 600 | 500 |
| லீக்ஸ் | 450 | 400 | 440 | 500 |
| பீற்றூட் | 400 | 480 | --- | 500 |
| கறிமிளகாய் | 800 | 750 | 700 | 800 |
| முருங்கைக்காய் | --- | --- | --- | --- |
| போஞ்சி | 650 | 500 | 500 | 500 |
| கத்தரிதம்புள்ள | 450 | 400 | 450 | 450 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 150 | 120 |
| தேசிக்காய் | 150 | 120 | 120 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 90 | 70-90 | 70-100 |
| இராசவள்ளி | 300 | 350 | 350 | 300 |
| வெங்காயப்பூ | 650 | 850 | 800 | 800 |
| முள்ளங்கி | 200 | 200 | 150 | 160 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 50 | 50 | 50 |
| ஈரப்பலா | 120 | 160 | 150 | 160 |

# கட்டளைத்தளபதி- கடற்றொழில் அமைச்சர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுவர்ணா போதோட்ட, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று முன்தினம் சனிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில், அண்மைக் காலமாக அதிகரித்துள்ள மாட்டுத் திருட்டு, போதைப்பொருள் பாவனை, வாள்வெட்டு உட்பட்ட சமூக விரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

மேலும், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தாத வகையில், உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கின்ற காணிகளை விடுவித்தல் மற்றும் பாடசாலை மைதானம் போன்ற பொது இடங்களை புனரமைப்பதற்கு இராணுவத்தினரின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் இச்சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பிரஸ்தாபிக்கப்பட்டது. (நி-6-33)



யா/கைதடி கிழக்கு சனசமூக நிலைய இந்து வாலிபர் சங்கம் நடத்திய ஆறுமுகநாவலர் ஆண்டு கடந்த வெள்ளிக் கிழமை கைதடி கிழக்கு சனசமூக அம்பலவாணர் ஞாபகார்த்த அரங்கில் இடம் பெற்றது. (படம்:சபேசன்.சிவசந்திரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில்...

என்ற இளைஞனே உயிரிழந்தவரா வார்.

வீடு புகுந்த நபர்கள் குறித்த இளை ஞனை கத்தியால் குத்தியும் பலமாக தாக்கியுமுள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த நிலை யில் அயலவர்கள் மற்றும் உறவினர் களால் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவர் வழி யிலேயே உயிரிழந்துள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பான விசாரணை களை கிளிநொச்சி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ம-7,100,316)

## பாடசாலைகள்...

பரீட்சை நிமிர்த்தம் எதிர்வரும் ஜனவரி 21ஆம் திகதி முதல் பெப்ரவரி 19ஆம் திகதி வரை மீண்டும் விடுமுறை வழங் கப்படவுள்ளது.

உயர்தரப் பரீட்சைகள் நிறைவடைந் ததன் பின்னர், பெப்ரவரி 20ஆம் திகதி மூன்றாம் தவணையின் மூன்றாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகி, மார்ச் 24ஆம் திகதியுடன் நிறைவடைய வுள்ளன.

அதற்கமைய 2022ஆம் ஆண்டுக் கான இறுதித் தவணை கல்வி நட வடிக்கைகள் மார்ச் 24ஆம் திகதியு டன் நிறைவடையவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் 2023ஆம் ஆண்டுக் கான முதலாம் தவணை ஆரம்ப மாகும் தினம் குறித்து, பின்னர் அறி விக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## தேசிய இனப்...

அதேநேரம், எமது மக்களின் அபி லாஷைகளை பூர்த்தி செய்யாத அர்த்த மற்ற தீர்வை ஏற்கப்போவதில்லை என் றும் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு இணைக்கப்பட்டு உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரங் கள் பகிரப்பட வேண்டும் என்றும் இரா. சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார். (ம-7)

## புத்தாண்டில்...

அவ்வாறு பதிவான அனர்த்தங் களில், வீதி விபத்துக்களால் 17 பேரும் பட்டாசு உள்ளிட்ட கேளிக்கை வெடி விபத்தினால் 4 பேரும், வீழ்ந்து விபத் துக்குள்ளானதில் 18 பேரும் வாய்த் தகராறு காரணமாக ஏற்பட்ட மோத லில் காயமடைந்த 3 பேரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளதாக அதன் பணிப் பாளர் விசேட வைத்தியர் குமார விக் கிரமசிங்க தெரிவித்தார். (ம-7)

## புதிய வாகனங்...

துள்ளார்.

புதிதாக பதிவு செய்யப்பட்ட வாக னங்கள் மற்றும் உரிமை மாற்றம் செய் யப்படும்போது மாகாண எழுத்துகள் காரணமாக வாகனங்களுக்கான இலக் கத் தகடுகளை அடிக்கடி மாற்றம் செய்ய நேரிடுகிறது.

இந்தச் சிக்கல்களை தவிர்க்க வாகன இலக்கத் தகடுகளிலுள்ள மாகாணங்களைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்களை நீக்குவதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டி னார்.

வாகன உரிமையாளர்கள் மற்றும் போக்குவரத்து திணைக்களத்திற்கு இது தொடர்பில் ஏற்படும் சிரமங்கள் மற்றும் சிக்கல்களை இலகுபடுத்தும் வகையில் இத்தீர்மானம் எடுக்கப்பட் டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ம-7)

## புதிய வரி...

தனியார் வருமான மாத வரி அறவிடல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட் டுள்ள நடுத்தர மற்றும் ஏழ்மை நிலை யில் உள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக இந்த வரி விதிப்பு அமுல்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங் கம் குறிப்பிட்டுள்ளது.

மாதம் ஒரு இலட்சத்திற்கு அதிக மாக சம்பளம் பெறுபவர் மாத வரி செலுத்த வேண்டும்.

இதற்கமைய ஒரு மாத சம்பளம் ஒரு இலட்சம் பெறுபவர் 3,000 ரூபா யும், 2 இலட்சம் சம்பளம் பெறுபவர் 10,000 ரூபாயும் 2,50000 ரூபாய் சம்பளம் பெறுபவர் 21,000 ரூபாயும், 3 இலட்சம் சம்பளம் பெறுபவர் 35,000 ரூபாயும், 3,50000 ஆயிரம் சம்பளம் பெறுபவர் 52,500 ரூபாயும், 4 இலட்சம் சம்பளம் பெறுபவர் 70,500 ரூபாயும், 5 இலட்சம் சம்பளம் பெறுபவர் [illegible] ரூபாயும், 7,50000 ரூபாய் சம்பளம் பெறுபவர் 19,6500 ரூபாயும், 10 இலட்சம் சம்பளம் பெறுபவர் 28,6500 ரூபாயும் மாத வரி செலுத்த வேண்டும்.

அத்துடன் பொருள் மற்றும் சேவை, விவசாயம், கல்வி, சுற்றுலா, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகிய சேவை களுக்கான வரி 30 சதவீதத்தால் அதி கரிக்கப்பட்டுள்ளது. பெறுமதி சேர், சமூக பாதுகாப்பு வரிகளை கட்டம் கட்டமாக மறுசீரமைக்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. (ம-7)

## சர்வகட்சி...

அத்துடன், குறித்த தடைகளை களைந்து பேச்சுவார்த்தை முயற்சிகள் வெற்றி பெறுவதற்காக யதார்த்தமாக முன்னெடுக்கப்படக்கூடிய ஐந்தம்ச யோசனைகளையும் அவர் முன்வைத் துள்ளார்.

அந்த யோசனைகளில் முதலாவ தாக, 13ஆவது திருத்தச்சட்டம் பற்றிய விவாதம் முடிவுறுத்தப்பட வேண்டும் என்பதோடு, அதற்கமைவாக இறுதி நிலை ஒப்பந்தமானது உச்ச நீதிமன் றத்தின் வரையறுக்கப்பட்ட காலப் பகுதியில் (15 ஆண்டுகள் வரை) முழுமையாக அமுலாக்கப்பட வேண் டும் என்ற உத்தரவினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் ஊடா கவே, இனங்களுக்கு இடையிலான துருவமுனைப்படுத்தலின்றி முழுமை யாக நடை முறைச் சாத்திய மாக்க முடியும்.

இரண்டாவ தாக, பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை நடைமுறைப் படுத்துவதாக இருந்தால் இந்தி யாவினையும் உள்ளீர்த்ததான தொரு கிரமமான அணுகு முறை அவசிய மாகின் றது.

மூன்றாவதாக, மாகாண சபை கள் தற்போது உள்ள நிலைமை களை விடவும் மேலும் வினைத் திறனாக செயற் படுவதற்கு அனைத்து தரப் பினரும் இணங் குவதோடு அது பற்றிய விவாதத் தங்கள் நீடித்துச் செல்லாது பூச்சிய மாக்கப்பட வேண் டும்.

நான்காவதாக, பொறுப்புக்கூறல் குறித்து டெஸ் மண்ட் டி சில்வா வின் அறிக் கையை செயற் படுத்த முடியும். அதேநேரம், போர்க்கால பொறுப்புக்கூறல் தொடர்பிலான விட யங்களை படை யினருக்கு பின் னடைவுகளை ஏற் படுத்தும் வகை யில் முன்னெடு க்க கூடாது.

ஐந்தாவதாக, பிரஜைகளுக்கு இடை யிலான பாகுபாடுகளை எதிர்க்கும் அதேநேரம், சமத்துவமான நிலைமை களை ஏற்படுத்துவதற்காக நடவடிக் கைகள் முன்னெடுக்கப்படுவதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். அத்தோடு, இனப்பாகுபாடு, இன வாதம், மற்றும் சகிப்புத்தன்மை குறை வடைதல் ஆகியவற்றை எதிர்த்துப் போராடுவதற்காக டேர்பன் பிரகடனம் மற்றும் ஐ.நாவின் வழிவரைபடத்தினை பின்பற்ற வேண்டும்..

மேலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2008-2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முன் மொழியப்பட்ட செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதோடு உண்மை யான சமத்துவத்தினை அறிவார்ந்த சமூகங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, சிங்கள பேரினவாதத் தின் மீளமுடியாத வெற்றியின் அவ தாரம் என்று கருதிய கோட்டாபய ராஜ பக்ஷ, அரகலவின் எழுச்சியால் பதவி கவிழ்க்கப்பட்டு வெளியேற்றப்பட்ட படிப்பினை நம்முன்னே உள்ளது. ஆகவே, இனங்களுக்கு இடையிலான துருவப்படுத்தலை தொடர்ச்சியாக வளர்த்துச் செல்லாது அரசியல் தலை வர்கள் இதயசுத்தியுடன் செயற்படு வார் கள் என்று நம்பிக்கை கொண்டிருப்பதாக வும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)


ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு திகதி 01/01/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1442 — வெற்றி இலக்கங்கள்: மகரம் 3 6 1 3 1 6 — தேசிய லொத்தர் சபை

தன நிதானய — திகதி 2023.01.01 — சீட்டிழுப்பு இலக்கம் 1017 — ஆங்கில எழுத்து I — வெற்றி இலக்கங்கள் 26 35 39 55 — NATIONAL LOTTERIES BOARD

கொவிசெத — திகதி 2023.01.01 — சீட்டிழுப்பு இலக்கம் 3229 — ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 05 11 36 71 — தேசிய லொத்தர் சபை

மெகா பவர் — திகதி 01/01/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1335 — வெற்றி எழுத்து L — சுப்பர் இலக்க 01 — வெற்றி இலக்கங்கள் 41 48 56 79

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2023.01.01 — சீட்டிழுப்பு இலக்கம் 296 — மகரம் 11 16 19 54 மகரம் — தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத — திகதி 2023/01/01 — சீட்டிழுப்பு இலக்கம் 4987 — F 0 7 6 7 2 4 — தேசிய லொத்தர் சபை

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 1962 — நிறம் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 2023.01.01 — தினம் ஞாயிற்றுக்கிழமை — Y 24 32 46 53 — வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,028,800/-

சனிதா — ஞாயிற்றுக்கிழமை — சீட்டிழுப்பு திகதி : 2023.01.01 — சீட்டிழுப்பு இல : 4123 — வர்ணம் : இளஞ்சிவப்பு — வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,537,640/- — வெற்றி இலக்கங்கள் 04 11 39 71 — ஆங்கில எழுத்து O

சசிரி — சீட்டிழுப்பு வாரம் 269 — சீட்டிழுப்பு திகதி 2023.01.01 — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி இலக்கங்கள் 13 22 50 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,264,700/-

ராசி — சுப்பர் ஜக்பொட் ரூ. 2,570,149/- — திகதி 2023-01-01 — வெற்றி வாரம் 3674 — வர்ணம் ஊதா — வெற்றி இலக்கங்கள் 11 22 34 44 — வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,928,480/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — U 21 14 46 47 48 — சீட்டிழுப்பு வாரம் 1138 — வர்ணம் மஞ்சள் — திகதி 2023.01.01 ஞாயிற்றுக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 293,219,960.20 — தொலை பேசி : 011-2 333 546-47 — Web : www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI — ஞாயிற்றுக்கிழமை — சீட்டிழுப்பு இல : 1788 — வர்ணம் : பச்சை — சீட்டிழுப்பு திகதி : 2023.01.01 — வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,479,940/- — வெற்றி இலக்கங்கள் 04 19 53 62 — ஆங்கில எழுத்து K


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## A/L 2022 இற்கான நாடக பாடத்திற்கான வழிகாட்டல்

ஆரம்பம் : 03.01.2023
காலை 8.00
◆ கருத்தரங்கு 3 நாட்கள் நடைபெறும்.
◆ வெளி மாணவர்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.
இடம் : DMI - JAFFNA (ஆரியகுளம்)
(13991)
077 959 0360



## Toyota Land Cruiser Prado - 2015 விற்பனைக்கு

Model : Tx 150
வாகன இல : CBD - XXXX
(13983)
076 226 9153



## IELTS -New batch ஆரம்பம்

Sp.Offer 10% Discount உடன்
Basic & Advance grammar Class
First Class free of charge
இல.53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd Jaffna.
077 798 9830 by B.MURALI
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student visa செய்து கொடுக்கப்படும்.


## தங்கையின் நகையை திருடிய இளைஞன் பலி

(கொழும்பு)

தங்கையின் தங்க நகையை திருடிய இளைஞர் ஒருவர் பொலிஸாரின் துரத்தலின் போது வீட்டின் மாடியில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் கம்பளை பிரதேசத்தில் நேற்று பதிவாகியுள்ளது.

இதேவேளை உயிரிழந்தவர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபரால் திருடப்பட்ட தங்க நகையின் பெறுமதி சுமார் 11 இலட்சம் ரூபா என தெரியவந்துள்ளது. (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13998) 076 825 7716 (ஆகாஸ்)


# கண்ணீர் அஞ்சலி



வலம்புரி பத்திரிகை நிறுவனத்துடன் நீண்டகாலம் நட்புக் கொண்டவரும் V2 Travels நிர்வாக இயக்குநர் திரு. சி.சாருபன் அவர்களின் அன்புத் தந்தையுமான

## திரு.நடராசா சிவரட்ணம்

(ஓய்வு நிலை உதவிப் பொது முகாமையாளர், இலங்கை வங்கி - வடமாகாணம் & பொது முகாமையாளர்- V2 Travels & Tours (pvt) ltd)

அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம்.அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

பிரிவுத் துயரில் பங்கு கொள்ளும்
வலம்புரி பத்திரிகை நிர்வாகம்


## வேலை வாய்ப்புக்கள்

தகைமை இருந்தாலும் தகைமை இல்லா விட்டாலும் பதிவு செய்யும் அனைவருக்கும் திறமைக் கேற்ற வேலை வாய்ப்புக்கள்
100 + பகுதி நேர வேலை வாய்ப்புக்கள்
நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள அழையுங்கள்
074 320 8923
இல.45, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (13949)



## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✔ONLINE APPLICATIONS
✔VISA APPOINTMENTS
✔PASSPORT APPLICATION
✔POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension
(C-5723)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777



## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER
✔ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/=
✔ வயது-22 தொடக்கம் 35
✔ தகுதி- பட்டதாரிகள் (C-5723)
V2 TRAVELS
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்
49A,சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777


# மரண அறிவித்தல்



## சிவஞானம் செல்வராணி

நுணாவில் மத்தி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானம் செல்வராணி அவர்கள் (31.12.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகராஜா - கண்மணி தம்புதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற அரியகுட்டி சிவஞானம் அவர்களின் அன்பு மனைவியும் சிவாஜினி (Norway) அவரின் பாசமிகு தாயாரும் சத்தியசிலனின் (Norway) அன்பு மாமியாரும் சற்குருராணி (U.K), காலஞ்சென்ற தங்கராணி (U.K), பாலராஜா (U.K), பத்மராணி, விமலராணி (France), தர்மராணி (France) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற கந்தசாமி (France), சுகுமார்(U.K), பவானி(U.K), ராஜதுரை(U.K), மனோகரன் (France), கரிகரன் (France) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சஜித், துர்க்கா (Norway), சஜிதா (Norway), சஜனுகா (Norway) ஆகியோரின் பேர்த்தியும் ஆரிஜனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (02.01.2023) திங்கட்கிழமை 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.
(C-5721)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் அரச தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)

ஒரு பரப்பின் விலை 675,000 ரூபாய் மட்டும்
பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை
தொடர்பு - ஜெயம் (14000)
077 814 7389, 077 241 7589



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A9 பிரதான வீதியில் இருந்து 700 m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 62 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன.(பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை
தொடர்பு - ஜெயம் (14000)
077 986 5457, 077 026 7619


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.